ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1639/22 - 2010 පෙබරවාරි 03 වැනි බදාදා - 2010.02.03
*1639/22 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 03 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பீ. 22/71* (ii).

### *1971 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, தெங்கு அபிவிருத்திச் சட்டம்*

*30 மற்றும் 31 ஆம் பிரிவுகளின் கீழான கட்டளை*

*1971 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, தெங்கு அபிவிருத்திச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவினாலும் 31 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவினாலும் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் டி. எம். ஜயரட்ன ஆகிய நான், 1979 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதிய 69/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையை பின்வருவனவற்றைச் சேர்ப்பதன்மூலம் திருத்துகின்றேன்.*

(1) பின்வரும் பணிகளை அதன் முதலாம் அட்டவணையில் சேர்ப்பதன் மூலமும் -

"(9) தென்னையுடனான காணியின் பயிர்ச்செய்கை மற்றும் அதனை மேம்படுத்துதல் மற்றும் ஒழுங்குபடுத்துதலில் உதவுதல் ;

(10) தென்னை வளர்ப்பு மற்றும் தென்னைப் பெருந்தோட்டங்களில் வேறு பயிர்களின் வளர்ப்பு தொடர்பில் முறையான பயிர்ச்செய்கை நடைமுறைகளின் விவரக்கூற்று, பிரபல்யப்படுத்துதல், ஊக்குவித்தல் மற்றும் நெறிப்படுத்துதல்.".

(2) பின்வரும் தத்துவங்களை அதன் இரண்டாம் அட்டவணையில் சேர்ப்பதன் மூலமும் -

"(7) தென்னைப் பெருந்தோட்டங்களில் காணிப்பயன்பாடு மற்றும் தென்னையுடனான காணியின் பயிர்ச்செய்கை, பயிர்ச்செய்கையை ஒழுங்குபடுத்துதல், கட்டுப்படுத்துதல், மேற்பார்வை செய்தல், நெறிப்படுத்துதல், முகாமை செய்தல் மற்றும் பரிசோதனை செய்தல் என்பவற்றில் ஈடுபடுதல்.".

டி. எம். ஜயரத்ன,
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்.

கொழும்பு,
*2010, பெப்புருவரி 3.*

*2- 395*